**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண். 127 /2023**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

பி.வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கணேசன் | த/பெ.: | விஸ்வநாத கண்டியர் |
| கிராமம்: | விளக்குடி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 54 | முகவரி: | திருத்துறைப்பூண்டி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 25.03.2025

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

09.09.2021 ஆம் தேதி எனது மகன் வீரமுத்துவிற்கு எனது தந்தை விஸ்வநாத கண்டியர் தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்த மட்டில் எழுதி வைத்த உயில் ஆவணம் அசல் **பி.வா.சா.ஆ.1 ஆகும்.**(வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி உயிலானது பிரதிவாதியால் தயார் செய்யப்பட்டது என ஆட்சேபனைக்கு உட்ப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) 21.10.2021 எனது தந்தை விஸ்வநாத கண்டியர் இறப்பு சான்றிதழ் அசல் **பி.வா.சா.ஆ.2 ஆகும்.** 04.06.2024 தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்த மட்டில் எனது மகன் வீரமுத்து பெயரில் உள்ள நில உரிமை விபரங்கள் கணிணி நகல் **பி.வா.சா.ஆ.3 ஆகும்.** 04.06.2024 தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்த மட்டில் வீரமுத்து பெயரில் உள்ள நில உரிமை விபரங்கள் **பி.வா.சா.ஆ.4 ஆகும்**. 23.02.2022 சர்வே எண். 85/10 திருத்துறைப்பூண்டி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய சிட்டா சான்றிட்ட நகல்

**பி.வா.சா.ஆ.5 ஆகும்.** 23.02.2022 சர்வே எண்.85/11, திருத்துறைப்பூண்டி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய சிட்டா சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6 ஆகும்.** 26.02.2024 எனது தகப்பனார் பெயரில் உள்ள ஆவண எண்.180/2004 கொண்ட கிரய ஆவணம் **சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7 ஆகும்**. 26.02.2004 வாதிக்கு ஏற்படுத்தப்பட்ட ஆவண எண்.181/2004 கொண்ட கிரய ஆவணம் **சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.8 ஆகும்.** 2010–2011, 2012–2013, 2013–2014, 2021–2022 கைவசம் உள்ள என் பெயரிலுள்ள வீட்டு வரி இரசீது (எண்ணிக்கை–4) **அசல் பி.வா.சா.ஆ.9 ஆகும்.** தாவா 2வது அயிட்ட சொத்தில் நான் சாகுபடி செய்ததற்கான கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட 1430ம் பசலிக்கான சிட்டா மற்றும் அடங்கல் கணக்கு **சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.10 ஆகும்.** என் பெயரிலுள்ள மின் கட்டண அட்டை நகல் **பி.வா.சா.ஆ.11 ஆகும்.** 1ம் என் பெயரிலுள்ள ஆதார் அட்டை(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) நகல் **பி.வா.சா.ஆ.12** ஆகும். எனது மகனின் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். எனது பெயரிலுள்ள ஸ்மார் கார்டு (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) **பி.வா.சா.ஆ.13 ஆகும்.** தாவா 2வது அயிட்ட சொத்தில் நான் சாகுபடி செய்ததற்கான கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட 1431 ஆம் பசலி சிட்டா மற்றும் அடங்கல் கணக்கு சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.14 ஆகும்.** 13.04.2013ல் குடும்ப சொத்தை அடமானம் வைத்து சந்திரசேகர் என்பவரிடம் தொகைபெற்றதற்கான எழுத்துபூர்வமான ஆவணம் **பி.வா.சா.ஆ.15 ஆகும்.** (வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது). 23.06.1996ல் எனது தந்தை பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரய ஒப்பந்தம் நகல் தாக்கல் செய்கிறேன். 27.04.1997ல் எனது தந்தை பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரய ஒப்பந்தம் நகல் தாக்கல் செய்கிறேன். 1429ம் பசலிக்கு 2வது அயிட்ட சொத்தை பொறுத்த மட்டில் கிராம நிர்வாக அலுவலர் எனது பெயரில் வழங்கிய அனுபவ சான்று சான்றிட்ட **நகல் பி.வா.சா.ஆ.16 ஆகும்.** 2011–2012,

தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்த மட்டில் எனது பெயரிலுள்ள அனுபவ சான்று நகல் தாக்கல் செய்கிறேன். 1431ம் பசலிக்கு 2வது அயிட்ட சொத்தை பொறுத்த மட்டில் கிராம நிர்வாக அலுவலர் எனது பெயரில் வழங்கிய அனுபவ சான்று நகல் தாக்கல் செய்கிறேன். வாதி தாக்கல் செய்த வழக்கை அதிக செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.